FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2018

# Term Examination, March - 2018

| jkpo; I | juk; :- 13 (2018) | %dW kzpj;jpahyq;fs |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள் :**

**பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ள எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி – I

*1)* **மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

(i). பொங்குதிரை பொருத வார்மண லடைகரைப்
புன்கால் நாவற் பொதிப்புற இருங்கனி
பல்கால் அலவன் கொண்ட கோட்கூர்ந்து
கொள்ளா நரம்பின் இமிரும் பூசல்
இரைதேர் நாரை யெய்தி விடுக்குந்
துறைகெழு மாந்தை யன்ன விவணலம்.

அ) செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் தெளிவாக எழுதுக.

ஆ) இதன் மூலம் விளங்கும் சங்ககால அகத்திணை இலக்கிய மரபை எழுத்துக் காட்டுக.

இ) இச்செய்யுளில் இடம் பெறும் உள்ளுறை உவமத்தை இனங்கண்டு விளக்குக.

(3 x 4 = 12 புள்ளிகள்)

(ii). நலம் கிளர் பூமி என்னும் நறுந்துளாயின்
அலங்கலான் புணரும் செல்வம் காணவந்து அடைந்திலாதார்
இலங்கையின் நிருதரே இவ் ஏழ் உலகத்து வாழும்
விலங்கலும் ஆசை நின்ற விடா மத விலங்கலேயால்.

அ) இச்செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.

ஆ) இச்செய்யுளில் கூறப்படும் இராமனின் பெருமைகள் எவை?

இ) இச்செய்யுளில் கூறப்படும் விழா யாது? அதனைக் காண வராதவர்கள் யாவர்?

(3 x 4 = 12 புள்ளிகள்)

agaram.lk

**2) 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**அல்லது**

**'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியை படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

அ) மப்பின்றிக் காலமழை காணா மண்ணிலே
சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது.
ஏர்
ஏறாது காளை இழுக்காது
எனினும் அந்தப்
பாறை பிளந்து பயன் விளைப்பான்
என் ஊரான்
ஆழத்து நீருக்ககழ்வான் அவன்
நாற்று
வாழத்தன் ஆவி வழங்குவான் ஆதலால்
பொங்கி வளர்ந்து பொலிந்ததுபார்
நன்நெல்லு
தங்க நகைகள் தலைக்கணிந்த பெண்களே
கூடிக் குனிந்து கும்மி கொட்டுவதும்
காதினிக்கப்
பாடிக் கவலை பறக்கச் செய்கின்றதும் போல்,
முற்றி மனிதன் முயற்சிக்கு
இறை கொடுக்கும்.
பொற்காசாம் நெல்லுப் பொதி சுமந்து
கூத்தாடும்
அந்தப் பயிரின் அழகை அளந்தெழுத
எந்தச் சொல் உண்டாம் எமக்கு?

அவ் உழைப்பாளி
உள்ளம் நெகிழ்ந்தான்
ஒரு கதிரைக் கொத்தாகக்
கிள்ளி முகர்ந்தான்
கிறுகிறுத்துப் போகின்றான்
சூடும் சிறு பயிர் மேல்
சோ வென்று நள்ளிரவிற்
கொட்டும் உடன் கூடும்
கொலைக்காற்றும் தானுமாய்
எட்டுத் திசையும் நடுங்க முழங்கி எழும்.

ஆட்டத்து மங்கையர் போல்
அங்கு மொய்த்து நின்ற பயிர்
பாட்டத்தில் வீழ்ந்தழிந்து பாழகிப் போய்விட்வே
கொள்ளை போல் வந்து கொடுமை விளைவித்து
வெள்ளம் வயலை விழுங்கிற்று .........
பின்னர் அது
வற்றியதும் ஓயாது வலக்கரத்தில் மண்வெட்டி
பற்றி அதோ பார் பழையபடி கிண்டுகின்றான்
சேர்த்தவற்றை
முற்றும் சிதற வைக்கும் வானத்தைப்
பார்த்தயர்ந்து நிற்கும் பழக்க மற்றோன்
வாழி அவன்
ஈண்டு முதலில் இருந்தும் முன்னேறுதற்கு
மீண்டும் தொடங்கும் மிடுக்கு.

agaram.lk

I. ஒரு விவசாயியின் அயரா உழைப்பு இச்செய்யுளினூடாக வெளிப்படுமாற்றினை விளக்குக?

II. செய்யுளில் வெளிப்பட்டு நிற்கும் பொருளணிகளை எடுத்து விளக்குக.

III. இங்கு விவசாய நிலம், நெற்பயிர் என்பன சித்தரிக்கப்படுமாற்றை விளக்குக.

IV. நாற்று வாழத்தன் ஆவி வழங்குவான், வானத்தை பார்த்து அயர்ந்து நிற்கும் பழக்க மற்றோன் என்ற தொடர்களின் மூலம் ஆசிரியர் உணர்த்த விரும்பும் கருத்தை தெளிவுபடுத்துக?

(4 x 4 = 16 புள்ளிகள்)

**அல்லது**

ஆ) எங்கட மல்லிகைத்தீவு ஊர் வளைச்சு ஒரே வயல் வெட்ட பெரிய வெளி வடிச்சல் சேனை, சக்கரை வெட்ட சிறுக்குளம் என்று எவ்வளவு வயல் வெட்ட? எல்லாம் இரண்டு போகம் செய்து நீர்ப்பாய்ச்சல் பூமி பெருவெளிக் குளத்தில் நெறைஞ்சி மகாவலித் தண்ணி வயலுக்கெல்லாம் பாயும் எங்க ஊர் பெரிய ஊர் இல்ல வயல் வெட்டைக்கு நடுவில் இருக்கிற திட்டி தான் எங்கட ஊர். அந்தத் திட்டில் எல்லாவளவுக்குள்ளயும் தென்னை மரம் நிக்கி, பென்னம் பெரிய இலுப்பை மரம் ஒண்ணும் ஊருக்கு நடுவில் றோட்டோரத்தில் இருக்கு அந்த இலுப்பமரத்தடியில் தான் பள்ளிக் கூடமும் இருக்கு அந்தப் பள்ளிக்குத்தானே நீ வாத்தியாராய் போறே. ஆனால் முதல் நாளிலேயே இப்படி சேத்திலே புதைஞ்சிற்றா. பாவம் ! இன்னமும் முன் ரோதையில இருக்கிற சுரியையே கழற்றி முடியல்ல. எங்க ஊர்மண் பசையுள்ள மண் என்று சொன்னனே தொட்டா ஒட்டிக் கொள்ளும் சைக்கிள் ரோதையில ஒட்டி இருக்கிற சுரியைத் தட்ட எவ்வளவு கஸ்டமாயிருக்கும் என்ன செய்யிறது. உன்ர கஸ்ரகாலம் சுரண்டு.

எங்க ஊர் வயல் வெட்டைக்கு நடுவில் இருக்குதெண்டல்லவா சொன்னன்? நாய்க்கு நடுச்சமுத்திரத்திலயும் நக்குத் தண்ணிதான் எண்டு சொல்லுவாங்க வளைச்சு வயல் வெளியா இருந்தாலும் எங்க ஊரில் எவனுக்கும் சொந்த வயற்காணி இல்ல. இந்த வயல்களுக்கெல்லாம் சொந்தக்காரர்கள. திருக்கிணர் மலையிலயும் கிண்ணியாவிலயும் மூதூரிலயும் தான் இருக்காங்க. அவங்கட வயல ஆயத்துக்கு எடுத்துத் தான் எங்க சனம் செய்யும் வயற்காணி எங்கட்ட இல்லாட்டியும் சோத்துப்பஞ்சம் இல்ல. ஆனா வெள்ளாம வெட்டுக் காலத்தில் எங்க ஊருக்கு வந்தியெண்டாத் தண்ணி குடிச்சிருக்க மாட்டா, ஏனெண்டா எல்லாக் கிணத்தடியிலும் மணச் சவுக்காரத்த மேலில தேச்சித் தேய்ச்சிக் குளிக்கிறதால கிணத்துத் தண்ணியெல்லாம் சவுக்காரமணமாத்தான் இருக்கும். அப்படியாப்பட்ட பவிசு எங்க ஊரு.

I. மல்லிகைத்தீவு கிராமத்தின் சிறப்புக்கள் எவை என உரையில் கூறப்பட்டுள்ளது.

II. "நாய்க்கு நடுச்சமுத்திரத்திலும் நக்குத் தண்ணிதான்' என்ற பழமொழியை ஆசிரியர் எடுத்துக் காட்டியதன் நோக்கம் என்ன?

III. வெள்ளாம வெட்டுக்காலத்தில் இவ்வூருக்கு உள்ள பவிசு யாது? அதற்கான காரணம் என்ன?

IV. இவ்வுரை பகுதியில் ஆசிரியர் பயன்படுத்திய பேச்சுத்தமிழ் பற்றி கருத்துரை தருக.

(4 x 4 = 16 புள்ளி)

agaram.lk

## பகுதி – II

3) **வினைசெயல் வகை என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியவற்றை ஆதாரமாக கொண்டு.**

அ) பொதுவான வினை செய்யும் ஆற்றல்

ஆ) வலிமையுடையான் செய்யும் திறன்

இ) ஒப்பான் செய்யும் திறன்

ஈ) மெலியான் செய்யும் திறன். என்பவற்றை தெளிவுபடுத்துக.

(4 x 5 = 20 புள்ளிகள்)

4) **வசிட்டமுனிவர் வேதியரொடு முடிசூட்டுவிழா மண்டபத்திற்கு வந்தது முதல் இராமன் தேரில் ஏறிச் செல்லும் பகுதியில்.**

அ) வசிட்ட முனிவரின் வருகையும் செயலும்

ஆ) சுமந்தரனின் செயற்பாடுகள்

இ) தேரில் செல்லும் இராமனைக்கண்ட மகளிர் செயல்கள்

ஈ) மகளிர் செயலை எடுத்துக்காட்டும் கம்பரின் கவி ஆற்றல் என்பவற்றை தெளிவுபடுத்துக?

(4 x 5 = 20 புள்ளிகள்)

5) **சீறாப்புராணம் மழை அழைப்பித்த படலத்தை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக?**

அ) பெருமானார் முகமது நபி (ஸல்) அவர்களின் பெருமை.

ஆ) மழைமேகம் கருக்கொண்டு பொழிந்த காட்சி

இ) பெருமழையினால் மக்கள் அடைந்த துன்பம்

ஈ) உறுமப்புலவரின் பக்தி ததும்பும் சொற்களின் பிரயோகம்.

agaram.lk

(4 x 5 = 20 புள்ளிகள்)

6) **சுவாமி விபுலானந்தரின் பாரதி பாடல் என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு.**

அ) உத்தம கவிகளின் பாடல்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களைத் துலக்குக.

ஆ) கட்டுரை ஆசிரியரை பாரதியார் கவர்ந்தமைக்கான காரணங்களை தெளிவுபடுத்துக.

இ) கண்ணன் பாட்டில் அவர் கொண்ட ஈடுபாட்டிற்கான காரணங்களை ஆராய்க.

(6+7+7 = 20 புள்ளிகள்)

7) **நீண்ட பயணம் நாவலினூடாக.**

அ) செல்லத்துரையனை ஆளுமைமிக்க தலைவனாக சித்தரிக்கும் பாங்கு

ஆ) சரஸ்வதி என்ற பாத்திரத்தின் மன உணர்வுகள்

இ) ஒடுக்கப்பட்ட மக்களின் ஒற்றுமை உணர்வு என்பவற்றை விளக்குக.

(7+6+7 = 20 புள்ளிகள்)

8) **மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.**

அ) மணிமேகலை செய்யுட் பகுதியில் கூறப்படும் அறப்போதனை.

ஆ) யுகசந்தி சிறுகதையில் பாட்டியம்மாளினூடாக வெளிப்படும் முற்போக்கு சிந்தனைகள்.

இ) காளமேகப் புலவரின் பாடலில் வெளிப்பட்டு நிற்கும் நிந்தையும், துதியும்.

ஈ) சூரிய காந்தி கவிதையில் வெளிப்படும் கற்பனைச் சிறப்பு.

(2 x 10 = 20 புள்ளிகள்)

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

FWC

**தவணைப் பரீட்சை, மார்ச் - 2018**
**Term Examination, March - 2018**

| juk;:- 13 (2018) | jkpo;- II | %dW kzpj;jpahyq;fs; |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள் :**

- **பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களையும் , பகுதி II இல் “அ” பிரிவிலிருந்து ஒரு வினாவையும் “ஆ” பிரிவிலிருந்து ஒரு வினாவையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**
- **முதலாம் வினாவின் “அ” பகுதியிலுள்ள இருபது வினாக்களும் தனித்தனியாக தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதி அதனை உமது ஏனைய விடைத்தாள்களின் மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.**

## பகுதி – I

**01) (அ) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.

1. பின்வருவனவற்றுள் இதழ் குவிந்து ஒலிக்கும் உயிர் எழுத்துக்கள் எவை?
   (1) ஊ, ஔ (2) ஊ, இ (3) உ, ஏ (4) ஔ, ஏ (5) ஒ, இ (……)

2. செய்வித்தான் என்ற வினைமுற்றின் பிறவினைப் பகுதி.
   (1) செய் (2) செய்து (3) செய்வி (4) செய்பி (5) செய்ய (……)

3. வல்லின உயிர் மெய்க்குறில் எழுத்துக்களின் எண்ணிக்கை.
   (1) 42 (2) 30 (3) 90 (4) 126 (5) 133 (……)

4. ஐ, ஔ என்ற எழுத்துக்களின் இன எழுத்துக்கள் முறையே
   (1) இ, ஊ (2) ஈ, ஊ (3) ஈ, உ (4) இ, உ (5) ஈ, இ (……)

5. பின்வருவனவற்றுள் இடைச்சொல்லை அடியாகக் கொண்டு ஆக்கப்பட்ட பெயர்ச்சொல் யாது?
   (1) எவன் (2) சான்றோன் (3) அவன் (4) யாவன் (5) மற்றவன் (……)

6. ஆசிரியர் மூன்று மணிக்கு வரச்சொன்னார். இங்கு ‘கு’ உருபு உணர்த்திய பொருள்.
   (1) முதற்காரணம் (2) முறை (3) அனுபவப்பேறு
   (4) காலக்குறிப்பு (5) எல்லைப்பொருள் (……)

7. எதிர்மறை ஏவல் வினையாக அமைந்த சொல்
   (1) பழக்காதீர் (2) சிரிக்காது (3) உண்க
   (4) உண்ணற்க (5) கொடுக்காது (……)

8. தற்கால வழக்கில் துணைவினைபெற்று நிகழ்வுத்தொடர்ச்சி எனும் காலக்கூறுபாட்டை உணர்த்தும் வினை.
   (1) எழுதிக் கொண்டிருந்தாய் (2) எழுதிக் கொண்டிருக்கின்றாய்
   (3) எழுதுகின்றாய் (4) எழுதியிருப்பாய்
   (5) எழுதியிருக்கின்றாய் (……)

agaram.lk

9. ஐந்து வினாக்கள் தரப்பட்டுள்ளன. எவையேனும் இரண்டிற்கு விடைதருக. இதில் மாற்றுப் பெயராக அமைந்த சொல்.
(1) ஐந்து (2) தரப்பட்ட (3) இரண்டு
(4) எவையேனும் (5) விடை (……)

10. பின்வாங்கு எழும்பு இங்கு இடம் பெற்ற ஆகு பெயர்?
(1) பொருளாகு பெயர் (2) இடவாகு பெயர் (3) சினையாகு பெயர்
(4) சொல்லாகு பெயர் (5) தானியாகு பெயர் (……)

11. பின்வருவனவற்றுள் மகர ஈற்றும் புணர்ச்சி இடம் பெற்றுள்ள சொல்.
(1) மட்குடம் (2) முக்கனி (3) மரப்பெட்டி
(4) மாட்சி (5) பிற்காலம் (……)

12. "பாலோ பழமோ தா" இங்கு ஆகாரம் உணர்த்திய பொருள்.
(1) வினா (2) பரிநிலை (3) தெரிநிலை
(4) ஐயம் (5) விகற்பம் (……)

13. "எம் அம்பு கடி விடுதும்" இங்கு கடி என்ற உரிச்சொல் உணர்த்திய பொருள்.
(1) புதுமை (2) அச்சம் (3) கூர்மை (4) விரைவு (5) காவல் (……)

14. இங்கு இருபேறு தொகைகளாக வரும் தொடர்.
(1) துடியிடை (2) வளர்மதி (3) பவளவாய்
(4) பூங்குழல் (5) நிறைகுடம் (……)

15. பின்வருவனவற்றுள் இருபேறு பொருள் தரும் தொடர்.
(1) வெண்சோறு (2) விளாங்காய் (3) அரசனல்லன்
(4) கைந்நூல் (5) காலடி (……)

16. நீ நன்றாக வாழ வேண்டும் என்றால் கஷடப்பட்டு வேலை செய் இது ஒரு.
(1) எச்சத்தொடர் (2) எச்சவாக்கியத் தொடர்
(3) நிபந்தனை எச்சத்தொடர் (4) நிபந்தனை எச்சத்தொடர்
(5) முற்றுத் தொடர் (……)

agaram.lk

17. "தீயினாற் சுட்புண் உள்ளாறும் ஆறாதே நாவினாற் சுட்ட வடு" இங்கு இடம்பெற்றுள்ள அணி.
(1) முரண் அணி (2) வேற்றுமையணி (3) உருவக அணி
(4) வஞ்சகப் புகழ்ச்சியணி (5) தன்மை நவிற்சியணி (……)

18. 'அவள் ஆடாவிட்டால் நான் பாடமாட்டேன்" இது ஒரு
(1) தலைமைத்தொடர் (2) நிரப்பித்தொடர் (3) பெயரெச்சத்தொடர்
(4) வினையடைத்தொடர் (5) நிபந்தனை எச்சத்தொடர் (……)

19. பின்வருவனவற்றுள் பொருள் தொடர்பு அற்ற சொற்தொகுதி.
(1) அரும்பு, மொட்டு, மலர், போது
(2) அன்பு, வெறுப்பு, விருப்பு, கறுப்பு
(3) இளவல், ஏந்தல், செம்மல், ஆடூஉ
(4) அவியல், வறுவல், சுண்டல், குழையல்
(5) மலை, வெற்பு, வரை, விலங்கல். (……)

20. இடாப்பு, இரவிக்கை, இராணுவம் என்பன எந்த மொழிச் சொற்கள்.
(1) கன்னடமொழி (2) தெலுங்குமொழி (3) மலையாளமொழி
(4) ஒல்லாந்துமொழி (5) கிரேக்கமொழி (…… )

**ஆ) பின்வரும் ஐந்து வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.**

(1) தனிப்பகுதி, கூட்டுப்பகுதி என்பவற்றை உதாரணம் தந்து விளக்குக.

(2) மாற்றொலியன் என்றால் என்ன? உதாரணம் தந்து விளக்குக.

(3) நிரப்பித்தொடரை வைத்து அமைக்கும் கலப்பு வாக்கியம் இரண்டு தருக.

(4) ஏவல் வினைமுற்று என்றால் என்ன? எதிர்மறை ஏவல் பன்மை வினை மூன்றிற்கு இரண்டு உதாரணங்கள் தருக?

(5) ஓகார இடைச்சொல் ஐயப்பொருளிலும், ஓழியிசைப் பொருளிலும் வருவதற்கு உதாரணம் தருக. (5x2=10 புள்ளி)

**02) (அ) பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.**

பொருளியல் வழி இயங்கும் வெறும் இயந்திரம் அல்ல மனிதன். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக வளர்ந்து வந்த ஒரு பண்பாட்டின் உற்பத்தி. அவன் வளர உதவிய பண்பாட்டினை வளர்க்கும் சக்தியும் அவனிடமுண்டு. பல்வேறுபட்ட துறைகளில் பண்பாட்டு வளர்ச்சிக்கு அவன் ஆற்றியுள்ள தொண்டினைக் கொண்டு தான் அவனைன நோக்குதல் வேண்டும். தான் தானாக வாழவும், தன் பிற்சந்ததியினர் வாழவும் அவன் தன் கருத்துக்களை பொறித்துள்ளான். அக்கருத்துக்களின் வெளிப்பாட்டுச் சாதனமே மொழி. அக்கருத்து வெளிப்பாட்டிற்கு உருக்கொடுத்து உதவி நிற்பது அவன் பண்பாடு. எனவே மொழியும் பண்பாடும் பிரிக்கா வண்ணம் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன.

பண்பாடு என்பது ஒரு சமூகமோ அல்லது குறிப்பிட்ட ஒரு குழுவோ (மக்களோ) நாகரிகத்தில் எத்தன்மையை அடைந்திருக்கின்றது. என்பதே. “அவள் பண்பாடு இல்லாதவன்” என்று நாம் ஒருவனைக் குறிக்கும் போது அவனிடம் நாகரிக வாழ்வின் பண்புகள் இல்லை என்ற முடிவுக்கே வருகின்றோம். நாகரிகம் வளர்ச்சியடைந்த போது மக்களின் பண்பாடும் வளர்ந்து கொண்டே வருகிறது. புராதன நாகரிகங்களைப் பற்றி நாம் படிக்கும் போது அவைகளின் பண்பாட்டைப் பற்றி நாம் படிக்கும் போது அவைகளின் பண்பாட்டைப் பற்றித்தான் படிக்கிறோம். உதாரணமாக மொகஞ்சதாரோவைப் பற்றி படிக்கும் போது அம் மக்கள் எப்படி வாழ்ந்தனர் என்பதையே ஆராய்கின்றோம்.

ஆகவே நாகரிக வளர்ச்சியில் பண்பாடு இன்றியமையாதது. ஒரு குறிப்பிட்ட மக்களின் நாகரிகமோ, பண்பாடோ அவர்களின் மொழி சிற்பம், இசை, நாட்டியம் போன்வற்றில் பிரதி பலிக்கும். இன்றைய சமுதாயத்தை எடுத்துக் கொண்டால் ஒரு சமூகம் விஞ்ஞானம் அரசியற்கலை போன்றவைகளில் எவ்வளவு தூரம் முன்னேறி இருக்கின்றது. என்பதிலிருந்து அச் சமூகத்தின் வளர்ச்சியை அறியலாம். ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் மொழி வளர்ச்சியினின்றும் அச்சமூகம் நாகரிக வாழ்வில் எத்தன்மையை அடைந்திருக்கின்றது. என்பதை ஒருவாறு அறியமுடிகின்றது. ஒருவனின் உள்ளுணர்ச்சியை வெளிப்படுத்துவதற்குச் சிறந்த கருவி மொழி. இதே போலத்தான் ஒரு சமூகமோ அல்லது ஒரு நாட்டு மக்களோ தங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்த மொழி மிகவும் அவசியமாகின்றது,

(10 புள்ளி)



agaram.lk

**ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

சமுகத்தைப் பற்றிய பேருண்மை ஒன்று உண்டு. தீமை கலவாத நன்மையே நிறைந்துள்ள சமுதாயம் உலகில் எப்போழுதாவது இருந்ததில்லை. இனி இருக்கப் போவதும் இல்லை. நலம், கேடு இரண்டு இயல்புகளும் கலக்கப்பெற்றதே சமூகம். நல்ல சமூகம் என்பதில் நலன்கள் அதிகமாக இருக்கின்றன. கேடுகள் குறைந்திருக்கின்றன. கெட்டசமூகம் என்பதில் தீமைகள் அதிகமாக முன்னணியில் வந்து நிற்கின்றன. நலன்கள் குறைந்து விடுகின்றன. ஒரு தனிமனிதன் வலிவுபடைத்த வாழ்வு வாழுகின்ற பொழுது அவனுக்கு நோய்கள் அதிகம் உண்டாவதில்லை. ஆனால் அவன் மெலிந்து போகுங்கால் நோய்கள் பல அவன் உடலில் தோன்ற ஆரம்பிக்கின்றன. இக்கோட்பாடு ஒரு சமூகத்திற்கும் பொருந்தும் உறுதிப்பாட்டோடு கூடிய வாழ்வு அந்தச் சமுதாயத்தில் இருக்கின்ற பொழுது நலன்கள் யாவும் அங்கு மிளிர்கின்றன. சமூக வாழ்வு சீர்குலையுங்கால் கேடுகளும் பல ஆங்கு தோன்ற ஆரம்பிக்கின்றன.

அவரவர் மனப்பக்குவத்திற்கும் ஏற்ப மக்கள் சமுதாயத்தோடு விதவிதமான இணக்கங்கள் கொள்கின்றன. தன்னுடைய சுகவாழ்வில் கண்ணும் கருத்துமாய் இருப்பவனுக்கு உலகிலுள்ள நலமும் கேடும் தென்பவடுவதில்லை. தான் நாடுகின்ற இன்பம் ஒன்றிலேயே அவள் எண்ணம் வைத்தவனாய் இருக்கின்றான். அத்தகையவன் மக்களுள் கடைத்தரமானவன் அவன் விலங்குக்கு ஒப்பானவன். இனி தரத்திலே அவனை விட மேலானவன் ஒருவன் இருக்கின்றான். உலகில் உலகில் கேடுகள் பல இருக்கின்றன. என்னும் உண்மையை அவன் அறிந்து கொள்கின்றான். அக்கேடுகளில் இருந்து தான் தப்பித்துக் கொள்வதற்கு உலகை அவன் துறந்து விடுகின்றான். தனியாய் இருந்து கொண்டு தனக்குத்தோன்றும் அமைதியான நல்வாழ்வை வாழ அவன் முயலுகின்றான். அத்தகையவனை துறவி என்று அழைப்பது உலக வழக்கு ஆனால் துறவிகளுள் வகன் கடையவன் ஆகின்றான். ஏனெனில் கேட்டுக்கு அஞ்சி அவன் உலகில் நின்று விலகியவன் ஆகின்றான். இவனினும் மிக்கவனாக மற்றொருவர் இருக்கின்றான். அவனைச் அச்சமூக சீர்திருத்தக்காரன் என்று சொல்ல வேண்டும். சமூகத்திலுள்ள சீர்கேடுகளையெல்லாம் அவள் தெளிவு பட அறிந்து கொள்கின்றான். அவைகளை விலக்குவது தன் கடமையென்று அவன் உணருகின்றான். கேடுகளைப் பற்றி மற்றவர்களுக்கு எடுத்து அவன் புகட்டுகின்றான். கேடுகளை அகற்றுவதற்கான வேலைத்திட்டங்களை நிர்மாணிக்கின்றான். பலரைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு சமூக சீர்திருத்தங்களை அவன் செய்ய ஆரம்பிக்கின்றான்.

(i) சமுதாயம் பற்றி ஆசிரியர் கொண்ட கருத்து யாது?

(ii) நல்ல சமூகம் என்றால் என்ன? கெட்ட சமூகம் என்றால் என்ன?

(iii) சமூகத்திலுள்ள மூன்று விதமான மக்களும் யாவர்?

(iv) தரத்தினில் மேலானவன் யார்? அவனிலும் மிக்கவன் யார்?

(v) மக்களுள் கடைத்தரமானவன் பற்றி ஆசிரியர் கொண்ட கருத்து யாது?

(5x2=10 புள்ளிகள்)

agaram.lk

**03) பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிவு செய்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை வரைக.**

அ. மொழியும் பண்பாடும்.

ஆ. ஆரோக்கிய வாழ்வும் சமூக மேம்பாடும்.

இ. கற்றல் செயற்பாட்டில் நேரமுகாமைத்துவமும் திட்டமிடலும்.

ஈ. நாட்டார் கலை வளர்ச்சிக்கு பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஆற்றிய பணிகள்.

உ. பசுமைப் புரட்சி செய்வோம். *(20 புள்ளிகள்)*

## பகுதி – II

### பிரிவு – அ

**04)** அ. சங்ககால அகத்திணை நூல்களைக் குறிப்பிட்டு அகத்திணை மரபின் முக்கிய அம்சங்களை விளக்குக.

ஆ. சங்க இலக்கியங்களில் கையாளப்பட்ட உள்ளுறை உவமம், இறைச்சி என்ற இரு அணிகளையும் அகத்திணைப் பாடல்களினூடாக விளக்குக.

இ. சங்க இலக்கியங்களில் அகமும் புறமும் விரவிய நூல்கள் பற்றி கருத்துரை தருக.

(3 x 5 =15 புள்ளிகள்)

**05)** அ. பல்லவர்கால பக்தி நெறியின் வளர்ச்சிக்கு ஊற்றாக இருந்தது சங்கமருவிய காலம் ஆகுமா? கருத்துரைக்குக.

ஆ. பல்லவர் கால வைஷ்ணவ இலக்கியங்களை எடுத்துக் காட்டுக.

இ. வைஷ்ணவ பக்தி இலக்கிய மரபில் பெரியாழ்வாரின் பங்களிப்பினை மதிப்பிடுக.

(3 x 5 =15 புள்ளிகள்)

agaram.lk

**06)** அ. நாயக்கர் காலத்தில் தோன்றிய பிரபந்த இலக்கியங்களை எடுத்துக் காட்டுக.

ஆ. அக்காலத்தில் தோன்றிய தனிப்பாடல்களின் பண்புகளை எடுத்துக் காட்டுக.

இ. அக்காலத்தில் தோன்றிய பொதுமக்கட் சார்பான இலக்கியங்கள் பற்றி கருத்துரை வழங்குக. (3 x 5 =15 புள்ளிகள்)

### பிரிவு – ஆ

**07)** அ. ஒல்லாந்தர் காலப்பகுதியில் தோன்றிய இலக்கியங்களை வகைப்படுத்திக் காட்டுக.

ஆ. அவற்றின் பண்புகளை விளக்குக. (7 + 8 =15 புள்ளிகள்)

**08)** மேல்வருவனவற்றில் எவையேனும் மூன்றினைப் பற்றிக் சிறுகுறிப்பு எழுதுக.

அ. பதிப்புத்துறையில் சி. வை தமோதரம்பிள்ளை

ஆ. நாடகத்துறையில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை

இ. கவிதைத் துறையில் மஹாகவி து. உருத்திரமூர்த்தி

ஈ. சிறுகதைத்துறையில் வ. அ. இராசரத்தினம்

உ. நல்லூர் சின்னத்தம்பிப் புலவர். (15புள்ளிகள்)